# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலைகலாசார பீடம்

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (MAR 2015)

## PSS 3203 – இலங்கையின் அரசியற் பொருளாதாரம்
## (POLITICAL ECONOMIC OF SRI LANKA)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

01 JUN 2015 EASTERN UNIVERSITY

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக

---

### பகுதி – I

01.

அ) மூடிய பொருளாதாரக் கொள்கை என்றால் என்ன?
(05புள்ளிகள்)

ஆ) 1970 - 1977 காலப்பகுதியில் இலங்கையில் நிலவிய மூடிய பொருளாதாரக் கொள்கையின் வகிபங்கினை விளக்குக.
(20புள்ளிகள்)

02.

அ) இந்தியாவிலிருந்து பெருந்தோட்டச் செய்கைக்காக இந்திய வம்சாவழி மக்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக. (10புள்ளிகள்)

ஆ) இந்திய வம்சாவழி மக்களது பிரதான உரிமைகள் நிராகரிக்கப்பட்டமைக்கான ஏதுக்களை தெளிவாக்குக.
(15புள்ளிகள்)

03.

அ) இலங்கை மீது இந்தியா செல்வாக்குச் செலுத்துவதற்கான அடிப்படை விடயங்களைக் குறிப்பிடுக. (10புள்ளிகள்)

ஆ) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி செய்த 2005 -2014 ஆம் ஆண்டிற்கும் இடையில் சீனா இலங்கையின் அபிவிருத்தியில் அதிகளவு செல்வாக்குச் செலுத்தியுள்ளது'' இக் கூற்றினை விளக்குக. (15புள்ளிகள்)

04.

அ) ஒரு நாட்டின் அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கு வரவு செலவுத்திட்டம் அவசியமாகும். அதற்கான காரணங்களை தெளிவாக்குக. (05புள்ளிகள்)

ஆ) இலங்கையில் 2014 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டம் தேர்தலை மையமாகக் கொண்டதாகும். விளக்குக.

(20புள்ளிகள்)

## பகுதி – II

05. "1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை இன்று வரை நடைமுறையில் உள்ளது'' இக்கூற்றினை மதிப்பிடுக. (25புள்ளிகள்)

06. " அரசியல், பொருளாதார நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்தியா இலங்கை விவகாரங்களில் தலையிடுகின்றது'' இக்கூற்றினை பகுப்பாய்வு செய்க. (25புள்ளிகள்)